த.வெ.க. அரசின் பட்ஜெட்டில் திட்டங்களை தேடிக்கொண்டே இருக்கிறோம்

# திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள்தான் இன்றளவும் மக்கள் மனதில் உள்ளது!

## பேரவையில் ஓ.பன்னீர்செல்வம் பேச்சு!

**சென்னை, ஆக. 12 -**

**தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசின் திட்டங்கள்தான் தற்போதும் நடைமுறையில் இருப்பதாக தி.மு.க. எம்.எல்.ஏ. ஓ.பன்னீர்செல்வம், பெருமிதம் தெரிவித்துள்ளார். த.வெ.க. அரசின் திட்டங்களை தேடுகிறேன், தேடுகிறேன் தேடிக்கொண்டே இருக்கிறேன் என்றும் விமர்சித்துள்ளார்.**



தமிழ்நாடு சட்டப்பேரவையில் த.வெ.க. அரசின் நிதிநிலை அறிக்கை மீது 3வது நாளாக நடந்த விவாதத்தில் பேசிய தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் ஓ.பன்னீர்செல்வம், தேர்தல் வாக்குறுதிகளை மறந்து நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார். நிதிநிலை அறிக்கையில் பெயர் மாற்றம் மட்டுமே உள்ளது என்றும் விமர்சித்தார். மக்கள் மனதில் திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்கள் மட்டுமல்ல, தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினும் நிறைந்திருப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

புதிய அறிவிப்புகள் வரும் என எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்திருப்பதாக குற்றம் சாட்டிய ஓ.பன்னீர்செல்வம், த.வெ.க. அரசின் திட்டங்களை தேடினேன், தேடினேன், தேடிக் கொண்டே இருக்கிறேன் என்றும் விமர்சித்தார்

தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக்கொடுக்காமல் ஆட்சி நடத்தியவர் தி.மு.க. தலைவர் தமிழ்நாட்டின் உரிமைக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார் தி.மு.க. தலைவர் த.வெ.க. ஆட்சியால் ஏமாந்துபோன பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள்

த.வெ.க. அரசின் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் தூங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக்கொடுக்காமல் ஆட்சி நடத்திய தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாட்டின் உரிமைக்காக தொடர்ந்து இன்றளவும் போராடிக் கொண்டிருக்கிறார்.

த.வெ.க. ஆட்சியால் ஏமாந்து போன பெண்கள், இளைஞர்கள், விவ சாயிகள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் புலம்பி கொண்டிருப்பதோடு , த.வெ.க. அரசின் தேர்தல் வாக்குறுதிகளும் தூங்கிக்கொண்டிருக்கின்றன.

முந்தைய ஆட்சிகளில், காவிரி பிரச்சினையில் சட்டரீதியாகவே தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டியதை சுட்டிக்காட்டிய ஓ.பன்னீர்செல்வம், காவிரி விவகாரத்தில் கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை என்பது தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக் கொடுப்பதாகும். காவிரியை தொடர்ந்து முல்லைப்பெரியாறு நீர்ப்பங்கீட்டிலும் தற்போது பிரச்சினை எழுந்திருக்கிறது . காவிரி விவகாரத்தில், கர்நாடக அரசின் கருத்தை த.வெ.க. அரசு வலுப்படுத்துகிறதா?'

இவ்வாறு ஓ.பன்னீர் செல்வம் பேசினார்.

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

எதிராக டெல்லியில் நடந்த மாணவர்கள் போராட்டத்திற்கு த.வெ.க. ஏன் ஆதரவு தெரிவிக்கவில்லை? உயர் கல்வியில் நீட் உட்பட எந்த நுழைவுத்தேர்வும் இருக்கக்கூடாது என்பதே திமுகவின் நிலைப்பாடு என முத்துராஜா எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

இதனையடுத்து தி.மு.க., அதிமுக உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்யக்கோரும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமாரின் பேச்சு அவைக்குறிப்பிலிருந்து நீக்கம்:**

சட்டப்பேரவையில் த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமாரின் பேச்சுக்கு தி.மு.க. உறுப்பினர்கள் கடும் கண்டனம் தெரிவித்ததை தொடர்ந்து, த.வெ.க. உறுப்பினர் பேச்சை அவைக்குறிப்பில் இருந்து சபாநாயகர் நீக்கினார். சட்டப்பேரவையில் த.வெ.க. உறுப்பினர் கண்ணியமாக பேச வேண்டும் என்று சபாநாயகர் கண்டித்தார்.

சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் குறித்து த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமார் அவதூறாக பேசியதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தார்.

திராவிட மாடல் ஆட்சியில் அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்களை தினமும் தொடர்பு கொண்டு மக்கள் பிரச்சனைகளை தீர்த்துவைக்குமாறு அறிவுறுத்தினார் என்றும், தி.மு.க. ஆட்சியில் ஓய்வு இல்லாமல் அமைச்சர்கள் உழைத்தார்கள் என்றும் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமாரின் பேச்சுக்கு திமுக கொறடா எ.வ.வேலுவும் கண்டனம் தெரிவித்தார்..

சட்டப்பேரவையில் த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமாரின் பேச்சுக்கு தி.மு.க. உறுப்பினர்கள் கடும் கண்டனம் தெரிவித்ததை தொடர்ந்து, த.வெ.க. உறுப்பினர் பேச்சை அவைக் குறிப்பில் இருந்து நீக்குவதாக சபாநாயகர் அறிவித்தார். சட்டப்பேரவையில் த.வெ.க. உறுப்பினர் கண்ணியமாக பேச வேண்டும் என்றும் சபாநாயகர் அறிவுறுத்தினார்.

தமிழ்நாட்டு இளைஞர்கள்

# த.வெ.க. அரசுக்கு தக்க பாடம் கற்பிக்கத் தயாராகி விட்டனர்!

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு வலைதளப் பதிவு!

**நெல்லை, ஆக.12-**

**“தமிழை பழித்தவனை தாயே தடுத்தாலும் விடாதே” என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளை நெஞ்சில் ஏந்திய தமிழ் இளைஞர்கள் த.வெ.க. அரசுக்கு தக்க பாடம் கற்பிக்க தயாராகி வருகிறார்கள் சி.எம். சார் என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

தமிழக அரசு நிகழ்ச்சிகளிலும்,பொது நிகழ்ச்சிகளிலும் கல்வி நிறுவனங்களி லும் தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடுவதற்கு ஏதுவாக மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய பாடலை 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் நாள் “தமிழ்த்தாய் வாழ்த்து”பாடலாக அறிவித்து ஆணை வெளியிட்டார் அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்கள். அவர் வழிவந்த முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் “தமிழ்த் தாய் வாழ்த்தை” ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் தொடக்கத்தில் ஒலிப்பேழையின்றி அனைவரும் எழுந்து நின்று பாட வேண்டும் என 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் தேதி அரசாணை வெளியிட்டு அதன்படி தமிழ்த்தாய் வாழ்த்துக்குரிய மரியாதை வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் த.வெ.க. ஆட்சி வந்தபின் “தமிழ்த் தாய் வாழ்த்து” பாடலை தந்த மனோன்மணியம் சுந்தரனார் பெயர் தாங்கி நிற்கும் நெல்லை பல்கலைக்கழகம் ஆளுநர் பட்டமளிப்பு நிகழ்ச்சியில், தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவது இடத்திற்கு தள்ளி அவமானப்படுத்திய போது “ஒன்றிய அரசின் சுற்றறிக்கை, ஆளுநரின் ஆணை” என்று கூறி த.வெ.க. அரசு பதுங்கி, ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்த உங்கள் இயலாமை சந்திசிரிக்கிறது CMsir?

சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்ததற்கு முதல் நாள்,ஒன்றிய அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய சென்னை உயர்நீதி மன்றத்தின் 15 புதிய நீதிபதிகள் பதவியேற்பு விழாவில் “தமிழ்த் தாய் வாழ்த்து” மட்டுமே முதலில் இசைக்கப்பட்டு உள்ள நிலையில் ஒன்றிய அரசு நிகழ்ச்சி, ஆளுநர் பங்கேற்கும் நிகழ்ச்சி என்று சாக்கு போக்குச் சொல்லி தமிழை அவமானப் படுத்தும் “த.வெ.க. அரசே” திருந்திக்கொள்!

“தமிழைப் பழித்தவனை தாயே தடுத்தாலும் விடாதே”என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளை நெஞ்சில் ஏந்திய தமிழ் இளைஞர்கள் மாமி அரசுக்கு தக்க பாடம் கற்பிக்க தயாராகி வருகிறார்கள் CM sir?

ஏற்கனவே”தமிழ்த் தாய் வாழ்த்து” பாடலுக்கு இருந்த அதிகாரத்தை பா.ஜ.க.விடம் அடகு வைத்துவிட்டு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து மக்களை ஏமாற்றும் த.வெ.க. அரசே மசோதாவாக சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி ஆளுநர் ஒப்புதலுடன் சட்டமாக்கத் தயங்குவது ஏன் CM Sir?

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் விளையாட்டு

# உள்கட்டமைப்பை வலுப்படுத்த ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

**புதுடெல்லி, ஆக.12–**

**தமிழ்நாட்டில் ஒலிம்பிக் அகாடமி அமைப்பதற்கான எந்த முன்மொழிவும் கிடைக்கவில்லை எனக் கூறும் ஒன்றிய அரசு; மாநிலத்திற்கு தெளிவான ஒன்றிய ஆதரவு கட்டமைப்பு இல்லை என மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றம்சாட்டினார்.**



கேலோ இந்தியா திட்டம் (KIS) அல்லது வேறு ஏதேனும் ஒன்றியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசிடமிருந்து ஒலிம்பிக் அகாடமி அமைப்பதற்கான முன்மொழிவு ஒன்றிய அரசுக்கு கிடைத்துள்ளதா, அத்தகைய முன்மொழிவுகளின் பரிசீலனை மற்றும் ஒப்புதல் நிலை, நிதியுதவி உள்ளிட்ட விவரங்கள், விளையாட்டு அகாடமிகளை அமைப்பதற்கான ஒன்றிய அரசின் நிதியுதவி வழங்கும் தகுதி அளவுகோல்கள் அல்லது வழிகாட்டுதல்கள் மற்றும் தமிழ்நாட்டில் அடித்தள விளையாட்டு உள்கட்டமைப்பு மற்றும் விளையாட்டு வீரர்களின் வளர்ச்சியை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் (டாக்டர் மன்சுக் மாண்டவியா) பதில் வருமாறு :-

(a) இத்தகைய எந்த முன்மொழிவும் இந்த அமைச்சகத்திற்கு கிடைக்கவில்லை.

(b) எழவில்லை.

(c) மற்றும் (d) ‘விளையாட்டு’ என்பது மாநிலப் பட்டியலில் உள்ள பொருளாக இருப்பதால், விளையாட்டுத் துறையின் வளர்ச்சி, விளையாட்டு அகாடமிகளை அமைத்தல், அடித்தள விளையாட்டு உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களின் மேம்பாடு உள்ளிட்ட பொறுப்புகள் முதன்மையாக சம்பந்தப்பட்ட மாநில/ ஒன்றியப் பிரதேச அரசுகளிடம் உள்ளன.

நாட்டில், தமிழ்நாடு மாநிலத்தையும் உள்ளடக்கி, விளையாட்டுத் துறையின் வளர்ச்சியை வலுப்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் மற்றும்

விளையாட்டு நடவடிக்கைகள் மூலம் முக்கிய இடைவெளிகளை நிரப்புவதன் வாயிலாக ஒன்றிய அரசு இந்த முயற்சிகளுக்கு துணைபுரிகிறது:

i. கேலோ இந்தியா விளையாட்டுத் துறை மேம்பாட்டிற்கான தேசியத் திட்டம்;

ii. தேசிய விளையாட்டு சம்மேளனங்களுக்கு (NSFs) உதவி;

iii. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்கள் மற்றும் அவர்களது பயிற்சியாளர்களுக்கு ரொக்க ஊக்கத் தொகை;

iv. தேசிய விளையாட்டு விருதுகள்;

v. சிறப்புமிக்க விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம்;

vi. பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா தேசிய விளையாட்டு வீரர்கள் நலத் திட்டம்;

vii. தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியம்;

viii. இந்திய விளையாட்டு ஆணையம் (SAI) மூலம் விளையாட்டுப் பயிற்சி மையங்களை நடத்துதல்; மற்றும்

ix. விளையாட்டு அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கான தேசிய மையம் (NCSSR).

மேற்கண்ட திட்டங்கள் குறித்த விவரங்கள் அமைச்சகம் மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் இணையதளங்களில் பொதுமக்கள் பார்வைக்காக கிடைக்கின்றன.

கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் உள்ள பல்வேறு விளையாட்டு வசதிகள், அதாவது விளையாட்டு உள்கட்டமைப்பு, கேலோ இந்தியா மையங்கள் (KIC), கேலோ இந்தியா மாநில சிறப்பு மையங்கள் (KISCE) மற்றும் கேலோ இந்தியா அங்கீகாரம் பெற்ற அகாடமிகள் (KIAA) ஆகியவற்றுடன், தமிழ்நாடு மாநிலத்தையும் உள்ளடக்கிய நாடு முழுவதும் உள்ள கேலோ இந்தியா விளையாட்டு வீரர்கள் (KIA) மற்றும் பயிற்சியாளர்கள் குறித்த விவரங்கள் அமைச்சகத்தின் https://dashboard.kheloindia.gov.in என்ற இணையதள டாஷ்போர்டில் பொதுமக்கள் பார்வைக்காக கிடைக்கின்றன.

மேற்கண்டவாறு கே.இ.பிரகாஷ் எம்.பி.க்கு பதிலளிக்கப்பட்டது.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்

# எத்தனைபேர் உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளாக உள்ளனர்?

## மாநிலங்களவையில் கவிஞர் சல்மா கேள்வி!

**புதுடெல்லி, ஆக. 12 -**

**“சிறுபான்மையினரைச் சேர்ந்த எத்தனை பேர் உயர்நீதிமன்ற உச்ச நீதி மன்றங்க ளில் நீதிபதிகளாக உள்ளனர்?” என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் கவிஞர் சல்மா கேள்வி எழுப்பினார்.**



இது குறித்து மாநிலங்கள வையில் அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:

Christians muslims 266LL minority community Co தற்போதைய உயர்நீதி மன்ற மற்றும் உச்சநீதி மன்ற நீதிபதி களின் விவரங்கள்; கடந்த 40 ஆண்டுகளில், ஒவ்வொரு 10 ஆண்டுகள் அடிப்படையில் minority communities சேர்ந்த நீதிபதி களின் விவரங்கள்; மற்றும் இந்தியாவின் பல்வேறு சதவீத உயர்நீதி மன்றங் களிலும் உச்சநீதிமன்றத் திலும் பாலின மற்றும் மத அடிப்படையிலான Diversi மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

இதற்கு ஒன்றிய அமைச்சர் அளித்த பதில் வருமாறு:

இந்திய உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் நியமனம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 124, 217 மற்றும் 224 ஆகிய பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

இப்பிரிவுகளில் எந்தவொரு சாதி அல்லது சமூகப் பிரிவின ருக்கும் இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான விதிகள் இடம்பெறவில்லை. எனவே, உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங் களின் நீதிபதிகளில் எந்த வொரு சாதி அல்லது சமூகப் பிரிவினரின் பிரதிநிதித்துவம் தொடர்பான வகுப்பு வாரியான தரவுகள் மத்திய அளவில் கிடைக்கவில்லை.

நியமன நடைமுறை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (Memorandum of Procedure MoP) படி, உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதற்கான பரிந் துரைகளைத் தொடங்கும் பொறுப்பு இந்திய தலைமை நீதிபதியிடம் (Chief Justice of India) உள்ளது. அதேபோல், உயர்நீதி மன்ற நீதிபதிகளை நியமிப்பதற்கான பரிந் துரைகளைத் தொடங்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியிடம் உள்ளது.

எனினும், நீதித்துறையில் சமூகப் பன்முகத்தன்மையை (Social Diversity) மேம்படுத்துவதில் அரசு உறுதிபூண்டுள்ளது. இதன் அடிப்படையில், உயர்நீதி மன்ற நீதிபதிகள் நியமனத்திற்கான பரிந்துரைகளை அனுப்பும்போது, பட்டியலினத்தவர் (Scheduled Castes SC), பழங்குடியினர் (Scheduled Tribes - ST), இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (Other Backward Classes OBC), சிறுபான்மையினர் மற்றும் பெண்கள் ஆகிய சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த தகுதியான நபர்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்குமாறு உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளிடம் அரசு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறது. இதன் நோக்கம், உயர்நீதி மன்ற நீதிபதிகள் நியமனத்தில் சமூகப் பன்முகத்தன்மையை உறுதி செய்வதாகும்.

உச்சநீதிமன்ற கொலீஜியத்தால் (Supreme Court Collegium) பரிந்துரைக்கப்படும் நபர்கள் மட்டுமே உச்சநீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளாக நியமிக்கப்படு கின்றனர்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில்

# துறைமுகம் மேற்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி இல்லத் திருமண விழா!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

*சென்னை, ஆக. 12*

*சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி - எம்.நாகலட்சுமி இல்லத் திருமண வரவேற்பு விழா (15.08.2026 சனிக்கிழமை) மாலை 7 மணிக்கும், திருமண விழா (16.08.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு மேல், சென்னை, கொரட்டூர், எண். 1267, கிழக்கு சாலையில் உள்ள கிரண் பேலஸ் மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.*



*மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி, ஜோசப் சாமுவேல், எஸ்.இராஜசேகர், டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், பி.கே. மூர்த்தி எம்.சி, பி.ஸ்ரீராமுலு எம்.சி, சாந்தகுமாரி எம்.சி, எம்.விஜயகுமா,ர் ஜி.எம். தேவன், இசட்.ஆசாத் எம்.சி, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, ஆர். கலைச்செல்வி, எம்.இ.கனி, பா. ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*எல்.சம்பத்குமார், பி.விஜயகுமார், க.பா.பிரதீப் குமார், எம்.விநாயகம், நா. ரஞ்சித் விஜயாலயன், மே. ஜனார்தனன், எம்.முத்துக் குமார், நா.சுந்தரம், எஸ்.சந்தியாகு, வி.சந்தானலட்சுமி, சி.பா.ஜெயராமன், டி. போஸ், நா.மோகன், எஸ். வெங்கடேசன், கே.ஜெய்பிரகாஷ், டி.சேகர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.*

*விழாவில் கழக இளைஞரணிச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.*

*விழாவில் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, பா.தாயகம் கவி, துறைமுகம் காஜா, இரா.கிரிராஜன் எம்.பி, ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா,*

*கே.சந்துரு, கோ.ஏகப்பன், சி. மகேஷ் குமார், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் எம்.சி, ஐ.சி.எப். வ.முரளிதரன், ஏ.நாகராசன், கூ.பி.ஜெயின் எம்.சி, வே.வாசு, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், செ.தமிழ் வேந்தன், எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ் குமார், வானவில் விஜய், நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், க.ராஜ்முகமது, இரா.வீரமணி, எல்.பி.எப்.மோகன், சுதா தீனதயாளன் எம்.சி, இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஜி.தாமோதரன்,*

*எம்.ஜெய்சங்கர், ஆர். ரவிச்சந்திரன், பா.கதிரவன், ஜி. ராமமூர்த்தி, டி.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், எல்.சத்யநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், லண்டன் க.முருகன், எல்.எழிலரசு, எம்.வி.ஆர்.சரவணன், வி.அசோக்குமார், வி.எம். முருகவேல், எம்.நாராயணன், ஏ.பி.செந்தில், பி.சகாயராஜ், வீடியோ கே.சம்பத், என்.சேகர் (எ) பிரஸ் சேகர், எஸ்.கதிர்வேல், வி.சங்கர், எம்.சுரேஷ், ஆர்.தங்கமணி, ஏ.மதுசூதனன், பி.ஜி.சுகுமார் வி.தம்பிதுரை, ஹாஜி முகமது, வெ.பரிமளம் எம்.சி, எல்.நவீன் தாஹா எம்.சி, ராஜேஷ் ஜெயின் எம்.சி மற்றும் மாவட்ட அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*57 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை, பகுதி துணைச் செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, மாவட்டப் பிரதிநிதி டி. எஸ்.சேகர், 84 வது வட்டக் கழகச் செயலாளர் மு.விஜயகுமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.*